





## நோக்கம்

தொடர்பாடல் மற்றும் ஊடகக்கற்கை என்ற பாடத்தை நீங்கள் இந்த அத்தியாயத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளீர்கள். தொடர்பாடலைப் பற்றியதொரு அடிப்படை அறிவுடன் அவற்றை எவ்வாறு வகைப்படுத்திக் கற்பது என்பது பற்றி நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த அத்தியாயத்தில் தொடர்பாடலின் பல்வேறு பிரிவுகளைப் பற்றிய அடிப்படைத் தேர்ச்சிகளை உங்களுக்கு வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப் பாடத்தில் உள்ள விடயங்களை மனனஞ் செய்வதை விட அதன் கருத்து எவ்வாறானது என விபரித்துக் கூறும் தேர்ச்சியை நீங்கள் அடைவது முக்கியமானதாகும்.

இதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களைப் பற்றிய அடிப்படை விளக்கத்தை செயல்முறை வழியாக விபரிக்கும் தேர்ச்சிகளை நீங்கள் அடைந்திட இப்பாடம் உதவும்.


## 1.1 தொடர்பாடல் அறிமுகம்

சாதாரணமாக நோக்குமிடத்து தொடர்பாடல் என்பது ''ஒருவர் ஒன்றை, ஒரு செய்தியை ஊடகமொன்றைப் பயன்படுத்தி மற்றொருவருக்கு வெளிப்படுத்துவது அல்லது ஒவ்வொருவருக்கிடையில் தகவல்களையும் கருத்துக்களையும் பரிமாறிக் கொள்வதாகும்.'' இது மனித சமூக செயற்பாட்டினது இயல்பாகும். மனிதனுடைய அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக தொடர்பாடலைக் கொள்ளலாம். மனித சமூக வழிநடத்துகைக்கும் மனித சிந்தனையை கட்டியெழுப்புவதற்கும் தொடர்பாடல் அவசியமாகின்றது. தனியாள் சார்ந்த பொதுவான, மற்றும் தனிப்பட்டதும் தொடர்ச்சியானதுமான சமூகச் செயற்பாடு என தொடர்பாடலைக் குறிக்கலாம். நீங்கள் உங்களுடைய தோழி அல்லது தோழனோடு பேசும்போது நிகழ்வது எதுவோ? அதுவே தொடர்பாடலாகும். இங்கு நாங்கள் சொற்களால் மட்டுமின்றி ஐம்புலன்களாலும் ஒன்றை பிறருக்கு வெளிப்படுத்த முடியும். மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களும் மனதும் தொடர்பாடலுடன் தொடர்புபடுகின்றன. கண்ணால் எதையும் பார்ப்பதும் காதால் எதையும் கேட்பதும் நாவால் எதையும் ருசிப்பதும் மூக்கால் எதையும் நுகர்வதும் சரீரத்தால் எதையும் உணர்வதும் மனதால் நினைப்பதும் ஆகிய இவையாவும் தொடர்பாடல் செயற்பாட்டில் உள்ளவைதான். மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகளும் இதைப் போலவே தொடர்பாடல் செய்கின்றன. ஆதலால் தொடர்பாடலில் உயிரியல் விஞ்ஞான அடிப்படை உண்டு. விலங்குகளுக்கு மோப்பமும் மனிதருக்கு நரம்புத் தொகுதியும் மூளையும் சகலதையும் அறிந்துகொள்ள உதவுகின்றன.

மனிதனுடைய பிரதான தொடர்பாடற் கருவியாக மொழி விளங்குகின்றது. மொழியைப் பயன்படுத்துவதற்கு முன்பதாக மனிதன் அங்க அசைவு, அபிநயம், கைச் சைகை மூலமும், சித்திரம், குறிப்புக்கள், ரேகைகள் என்பன மூலமும் தொடர்பாடலை மேற் கொண்டான்.

பண்டைக் காலத்து மனிதர்கள் வாழ்ந்த கற்குகைகளில் வரையப்பட்ட சித்திரங்கள் மூலம் இது தெரிய வருகின்றது. உதாரணமாக பிரான்சில் 'லஸ்கோ' கற்குகையிலும் ஸ்பெயினில் 'அல்டமீரா' குகையிலும் காணப்படும் சித்திரங்களைக் குறிப்பிடலாம். தற்போது கண்டுப்பிடிக்கப்பட்டுள்ள 15,000 ஆண்டுகளுக்கு முன்பு வரையப்பட்ட சித்திரங்கள் பண்டைய தொடர்பாடலுக்கு உதாரணமாக விளங்குகின்றன.





படம் :- 1.1.1
அல்டமீரா
குகைச்சித்திரங்கள்

ஒவ்வொரு சமூகங்களினதும் மக்கள் பொருத்தமான தொடர்பாடல் முறைகளைக் கட்டியெழுப்பிக் கொண்டமையைக் காணமுடிகின்றது. 'கூக்குரல் சத்தம், தீ மூட்டல், இலைகுழைகளை தொங்க வைத்தல், முரசறைதல், ஊதுகுழல், எக்காளமிடல், மணியடித்தல் போன்ற பல்வேறு பாரம்பரிய தொடர்பாடல் முறைகளை பண்டைக் கால சமூகம் பாவித்தமை தெரிகிறது. இவைகளுடன் நவீன தொழில் நுட்பமும் சேர்ந்து பிற்காலத்தில் 'வெகுஜன ஊடகம்' உருவாகியது. தொழில் நுட்ப முறைகளைப் பாவித்து பத்திரிகை, வானொலி, சினிமா, தொலைக்காட்சி, இணையம் போன்ற நவீன ஊடகங்கள் உருவாகின.



படம் :- 1.1.2 வெகுஜன ஊடகங்கள்

தொடர்பாடல் ஊடகங்கள் அச்சு ஊடகம், (Print Media) இலத்திரனியல் ஊடகம் (Electronic Media) என இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. வெகுஜன ஊடகங்கள் உலகம் முழுவதும் பிரபல்யமாகியுள்ளதால் தொடர்பாடல் பலமான சமூகச் சக்தியாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மனித சமூகத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு நிறுவனமாக வெகுஜன ஊடகங்கள் அமைந்திருப்பது இந்த பலத்தினாலாகும்.

### அ) தொடர்பாடலைப் பற்றிய லக்ஸ்வெல் என்பவரின் வரைவிலக்கணம்

அரசறிவியல் பேராசிரியர் 'ஹெரல் டீ லக்ஸ்வெல்' 1948 ஆம் ஆண்டளவில் தொடர்பாடல் என்றால் என்னவென்பதற்கு வரைவிலக்கணமொன்றை முன்வைத்துள்ளார். அதாவது **"ஒரு நபர் ஏதாவதொரு தகவலை ஏதாவது அலைவரிசையில் யாரேனும் நபருக்கு ஏதேனுமொரு தாக்கம் ஏற்படுத்துவதற்காக முன்வைப்பது"** தொடர்பாடல் என அவர் குறிப்பிடுகின்றார்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1.Who | - | ஒருவர் | - | தொடர்பாடுபவர் |
| 2.Says what | - | ஒரு விடயம் | - | தகவல் / செய்தி |
| 3.In which channel | - | ஏதாவது ஊடகம் | - | ஊடகம் |
| 4.To whom | - | மற்றொருவருக்கு | - | பெறுநர் |
| 5.With what effect | - | என்ன தாக்கம் | - | தாக்கம் |

தொடர்பாடுபவர் → தகவல் → ஊடகம் → பெறுநர் → தாக்கம்

1 2 3 4 5

லக்ஸ்வெல்லின் விளக்கத்தின் படி ஒருவர் அதாவது தொடர்பாடுபவர் தொடர்பாடல் செயற்பாட்டை ஆரம்பிக்கும் இடத்திலிருப்பார். அவர் ஏதாவது ஒரு அடிப்படையில் ஒரு தகவலை தயாரிப்பார். பரந்த வரைவிலக்கணமாக புரிந்து கொள்ளவேண்டுமாயின் இங்கு தகவற்தொடர்பாடுபவர் என்பவர் ஒரு நபர் அல்லது ஒரு நிறுவனம் எனக் கொள்ளலாம். தகவற்பரிமாற்ற வியலாளர்களால் வெளியிடப்படுபவை செய்திகள் அல்லது தகவல் எனப்படும். சமூகத்தில் காணப்படும் பல்வேறு தகவல்கள் செய்திகளாக உருவாகின்றன.

தொடர்பாடல் ஊடகம் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட செய்தியை முன்வைக்கப் பாவிக்கப்படும் முறையாகும். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற எந்த ஊடகத்தையும் இதற்காக பயன்படுத்திக் கொள்ளலாம். செய்தியைப் பெற்றுக்கொள்கின்ற நபர் அல்லது நபர்கள் அல்லது பெண்கள் அதாவது ஆண்கள், கிராம அல்லது நகரவாசிகள் வயது, கல்வித்தராதரம் சமூக கலாசார வடிவங்கள் ஆகியவற்றுக்கேற்ப வேறுபடும். தாக்கம் என்பது செய்தியின் இறுதியில் ஏற்படுகின்ற பலனாகும். மனப்பாங்கு அல்லது நடத்தை அல்லது நடைமுறை என்பவற்றால் தாக்கத்தை விளக்கமுடியும்.

## தொடர்பாடுபவர் (Communicator)

தொடர்பாடுபவர் என்பவர் ஏதாவதொரு தகவலை வெளியிடுபவராவார். தான் அனுபவிக்கும் ஏதாவதொரு சம்பவம் அல்லது சந்தர்ப்பத்தின் ஊடாக ஒரு செய்தியை தயாரித்து முன்வைப்பவர் தொடர்பாடுபவராவார். இவர் தொடர்பாடற் செயலின் ஆரம்ப இடத்தில் இருப்பார்.



படம் :- 1.1.3
தொடர்பாடுபவர்

## தகவல் (Message)

செய்தி என்பது முன்வைக்கப்படும் ஒரு விடயமாகும் சமூகத்தின் ஒரு நிகழ்வினூடாக உருவாகுவதே செய்தியாகும். ஒரு செய்தியில் இடம் பெற வேண்டியது எது என்பதைத் தொடர்பாடுபவர் புரிந்து கொள்ள வேண்டும்.

## ஊடகம் (Medium)

மேற் கூறப்பட்ட தகவல்களை வெளியிட ஏதாவதொரு ஊடகம் பயன்படுத்தப்படுகின்றது. சைகை, சமிக்ஞை, சித்திரங்கள் அல்லது மொழி ஆகிய பல வித ஊடக வடிவங்களால் தகவலானது வெளியிடப்படுகின்றது. பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி என்பவை இத்தகைய ஊடகங்களாகும்.

## பெறுநர் (Receiver)




படம் :- 1.1.4 பெறுநர்கள்


பெறுநர் என்பவர் தொடர்பாடுபவரால் வழங்கப்படுகின்ற செய்தியை பெற்றுக் கொள்பவராவார். பத்திரிகையை வாசிப்பவர் வாசகர் என அழைக்கப்படுவார். வானொலியைச் செவிமடுப்பவரும் தொலைக்காட்சி பார்வையாளரும் பெறுநராகவே கொள்ளப்படுகின்றனர். ஊடகங்களுக்கேற்ப பெறுநருடைய இயல்பும் வேறுபடலாம். பெறுநர் சமூகம், கல்வி, கலாசாரம், பொருளாதாரம் ஆகிய பல்வேறு காரணிகள் பற்றியும் விளக்கமுடையவராக இருக்க வேண்டும். பெறுநர் எப்போதும் பெறுநராகவே இருக்கமாட்டார். ஏதாவது ஒன்றை வெளியிடும் பொழுது அவரும் தொடர்பாடுபவர் ஆகிவிடுவார். ஆகையால் தொடர்பாடுபவர், பெறுநர் ஆகியோர் ஒரே நபரின் இரு வேறு வகிபாகங்களை வகிப்பவர்கள் ஆவார்.

## தாக்கம் (Effect)

தாக்கம் என்பது ஒரு ஊடகத்தை உபயோகித்து செய்தியொன்றை பெறுநருக்கு வழங்கி அதன் பெறுபேறாக பெறுநரிடம் எதிர்பார்க்கப்படும் விடயமாகும். எதிர்பார்க்கும் தாக்கம் கிடைக்கவோ அல்லது கிடைக்காமல் இருக்கவோ சந்தர்ப்பம் உள்ளது. சில நேரங்களில் எப்போதும் நாம் எதிர்பார்க்காத ஒன்று தாக்கமாக கிடைக்கப் பெற இடமுண்டு.

## ஆ) எளிமையான தொடர்டபாடல் சூத்திரம் (ஷெனோனும் வீவரும்)

தொடர்பாடலின் இயல்பை விஞ்ஞான பூர்வமாக விளங்கிக் கொள்வதற்கு பல்வேறு விடயங்களின் பண்புகளை கவனத்தில் கொண்டு ஆராய வேண்டும். சமூகவியல், உளவியல் அரசறிவியல், உயிரியல், கணிதம், பொறியியல் என்னும் பல்வேறு பாடங்களில் உள்ள தொடர்புகளே தொடர்பாடல் துறையாக உள்ளது. அவற்றைப் பற்றிய ஆய்வுகளிலீடுபட்ட விஞ்ஞானிகள் இருவராக க்ளோட் ஷெனோன், வொரன் வீவர் ஆகியோர் விளங்குகின்றனர். அவர்கள் கணிதம் மற்றும் மின்பொறியியல் பற்றிய நிபுணர்கள் ஆவர். அவர்கள் 1949 இல் முன்வைத்த தொடர்பாடற் சூத்திரம் கீழே தரப்படுகின்றது.




இம் மாதிரிக்கிணங்க ஏதாவதொரு செய்தி அல்லது தூது ஒரு மூலாதாரத்தை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்படுகின்றது. அது ஒரு ஊடகத்தின் வழியாக முன் வைக்கப்படும். அங்கு சிற்சில தடைகள் ஏற்படலாம். அவை கருத்துத் தடை அல்லது ஊடகத் தடையாக இருக்கலாம். இச்செய்தி வெற்றியையோ தோல்வியையோ அடையக்கூடும்.

## இ) தொடர்பாடலின் நோக்கங்கள்

எந்தவொரு சமூகத்திலும் அவ்வத் துறைகளின் பணிகளும் நோக்கங்களும் சமூக, பொருளாதார, அரசியல், கலாச்சார காரணங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. ஆகையால் தொடர்பாடலுடன் சம்பந்தப்பட்ட நோக்கங்கள் பொதுவான இயல்புகளையும் அவ்வந் நாட்டுக்குரிய இயல்புகளையும் கொண்டனவாக விளங்குகின்றன.

1. தகவல்கள் வழங்குவது
2. கல்வி வழங்குவது
3. மகிழ்வூட்டல்
4. தூண்டல் ஏற்படுத்துதல்.

போன்ற விடயங்களை தொடர்பாடலின் குறிக்கோள்களாக எடுத்துக் காட்ட முடியும்.



படம் :- 1.1.5 தொடர்பாடல்

மேலே கூறப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக சமூகமயமாக்கல் உரையாடல்கள், வாதப்பிரதிவாதங்கள் ஆகியவற்றை நடத்துதல், கலாசார முன்னேற்றம், சமூக ஒருமைப்பாடு என்பவற்றை ஏற்படுத்துதல் ஆகிய விடயங்களும் நோக்கங்களாகக் கொள்ளப்படுகின்றன.

## தகவல்கள் வழங்கல்

மக்கள் தொடர்பாடலின் முக்கிய நோக்கமாவது மானுட சமூகத்துக்கு தேவையான தகவல்களை தயாரிப்பதாகும். இன்றைய சமூகம் தகவற் சமூகமாகவும் அறிவை அடிப்படையாகக் கொண்ட சமூகமாகவும் கருதப்படுபவது இதனாலேயாகும். நாம் அன்றாட வாழ்க்கையில் அனுபவிக்கும் சம்பவங்கள், தகவல்கள், செய்திகள் போன்றவற்றின் இயல்புகளை அறிந்து கொள்ள முயல்வோம். யார்? என்ன? எவ்வாறு? எப்போது? எப்படி? எங்கே? ஏன்? என்ற கேள்விகளை எழுப்பி ஒன்றைப்பற்றி அறிந்து கொள்ள முயல்வோம். ஆதிகாலத்திலிருந்து மனிதன் தன்னைப் பற்றிய தகவல்களை மட்டுமன்றி தனது சுற்றம், சுற்றாடலிலும் சமூகத்திலும் புதிதாக நிகழ்வன பற்றியும் அறிந்துகொள்ள ஆவலாக இருந்தான். அவ்விதமான மானுடத் தேவைகளைப் பூர்த்திசெய்வது தொடர்பாடலின் பணியாகும். இன்று இச்செயலொழுங்கு உயர்வான வளர்ச்சி நிலையை அடைந்துள்ளது. தற்போது தேசிய மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலும் தகவல்களை வழங்கும் பிரதான நிறுவனங்கள் பல காணப்படுகின்றன.

## கல்வி வழங்குதல்

அறிவை வழங்குதல் தொடர்பாடலின் முக்கிய குறிக்கோளாகும். வெகுஜன ஊடகங்கள் ஊடாகவும் இப்பணி மேற்கொள்ளப்படுகின்றது. வகுப்பறைக் கற்றலை மேலும் பொருள் நிறைந்ததாக்கிட ஊடகங்களைப் பயன்படுத்தலாம். முறைசார் விதத்திலும் முறைசாரா வழிகளிலும் ஊடகங்கள் வழியாக கல்வி நிகழ்ச்சிகள் பல முன்வைக்கப்படுகின்றன. ஏதாவதொரு பாடத்துக்கிணங்க பாடவிடயங்களையும் கருத்துக்களையும் படிமுறையாக தெளிவுபடுத்துவது முறைசார் வழியாகும். பாடமொன்றை நேரடியாகத் தெரிந்தெடுக்காமல் நிகழ்ச்சி ஊடாக, பொதுவாக முன்வைக்கப்படுகின்ற கருத்துக்கள் வழியாக முறைசாராக் கல்விப் பணிகள் நடத்தப்படுகின்றன. உதாரணமாக ஒரு நாடகம் இரசிகர்களுக்கு ஏதாவதொரு திருப்தியைக் கொடுப்பது போலவே வாழ்க்கைக்குத் தேவையான எடுத்துக்காட்டுதல்களையும் தரக்கூடியதாக முன்வைக்கப்படலாம். முக்கியமாக சிறுவர் கல்விக்காக வெகுஜன ஊடகங்களினால் ஆற்றப்படுகின்ற சேவைகள் கலந்தாலோசிக்க வேண்டியவையாகும்.

### மகிழ்ச்சியை ஏற்படுத்துவது

ஒருவருக்கு அவரது வாழ்க்கையில் ஏதேனும் ஆறுதல், மகிழ்ச்சி, தூண்டல் ஆகியன தேவைப்படும். அதனூடாக காரியத்தை செய்வதற்காக ஏற்படும் ஆர்வம் அதிகரிக்கும். செம்மையான மென்மையான நகைச்சுவை, ஓய்வு, சமநிலை, ஆறுதல் ஆகியவை பெறுநரின் ஆர்வத்தை அதிகரிக்க அவசியமாகின்றன. வெகுஜன ஊடகங்கள் வாயிலாக இவற்றைப் பூர்த்தி செய்யலாம். இதைவிட தனி நபர்களுக்கிடையில் அல்லது சமூகத்துக்கிடையில் தொடர்பாடலினூடாக மகிழ்ச்சியடைய முடியும். சமய மத்திய ஸ்தலங்களிலும், நோய்நொடிகளுக்குச் செய்யப்படுகின்ற சடங்கு நிகழ்ச்சிகளிலும் எமக்குப் புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. வெகுஜன ஊடகங்களில் சங்கீதம், நாடகம், விநோதம் அடையும் நிகழ்ச்சிகள், கார்ட்டூன், திரைப்படங்கள் போன்றவற்றாலும் களிப்படையலாம். தற்காலத்தில் பொழுது போக்கு மகிழ்ச்சிக்காக வெகுசன ஊடகங்கள் அதிக கவனம் செலுத்துகின்றமையைக் காணலாம்.

### தூண்டுதல்

தனிமனித தேவைக்களுகாக சிற்சில வளங்களையும் செயற்பாடுகளையும் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதாயுள்ளது. தொடர்பாடல் ஊடாக அவை வெளிக் கொண்டுவரக் கூடிய விதத்தில் தொடர்பாடல் செய்யும் போது தூண்டுதலை ஏற்படுத்த முடியும். வர்த்தக விளம்பரங்களை இதற்கான உதாரணங்களாகக் காட்ட முடியும்.

## 1.2 அகமுகித் தன்மைத் தொடர்பாடல்

### அ) ஒருவருடைய மனோபாவங்களும் எதிர்விளைவுகளும்

தொடர்பாடல் நடைபெறும் விதத்தைப் பொறுத்து முதலில் எமக்கு தென்படுவது அகமுகித் தொடர்பாடலேயாகும். ஒருவர் தனது மனதோடு தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு மேற்கொள்ளும் தொடர்பாடல் அதாவது ஒருவருக்குள்ளே நடைபெறும் தொடர்பாடல் அகமுகித் தொடர்பாடலாகும். இதனை எளிமையாகச் சொல்வதனால் தான் தன்னுடனையே உரையாடுகின்ற தொடர்பாடல் என்று கூறலாம்.

தொடர்பாடலின் தொடக்கம் அகமுகித் தொடர்பாடல் ஊடாகவே ஏற்படுகின்றது. பல்வேறு ஒலிகள், ஒலிச் சமிக்கைகள், உருச்சமிக்கைகள், நுகர்சமிக்ஞைகள், சுவைச் சமிக்ஞைகள், ஸ்பரிச சமிக்ஞைகள் என்பவற்றை உள்வாங்கும் விதத்துக்கு இணங்கவே ஏனைய எல்லாத் தொடர்பாடல் நடத்தைகளும் உருவாகின்றன. இங்கு மனிதனுடைய மனோபாவங்கள் அவற்றுக்கான எதிர்விளைவுகள் காரணமாக தொடர்பாடல் ஏற்படுகின்றது என்பதை அறிந்து கொள்ள முடியும். மனிதனுடைய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றிற்கு உணர்த்தப்படுகின்ற சமிக்ஞைகளை மனிதன் உள்வாங்குகின்றான்.




படம் :- 1.2.1 அகமுகித் தொடர்பாடல்கள்

அதனைத் தொடர்ந்து, அதனடிப்படியில் மனதினூடாக (உள்ளம்) அச் சமிக்ஞைகளுக்கான துலங்கல்கள் காட்டப்படும்



படம் :- 1.2.2 பஸ் சாரதி பஸ்ஸை நிறுத்துதல்

**உதாரணம்**

சாரதியொருவர் பேரூந்து ஒன்றை ஓட்டும்போது திடீரென பாதையின் குறுக்காக பாயும் விலங்கொன்றைக் கண்டவுடன் பேரூந்தை நிறுத்த வண்டியின் தடுப்பினை உடனே அழுத்துவது.

இங்கு நிகழ்வது வெளித்தூண்டலினால் உருவாகும் மனோநிலையின் அடிப்படையில் தேவையான துலங்களைக் காட்டுவதாகும். மனம் பல்வேறு மனோபாவங்களை அமைத்துக் கொள்வது புலன்களினால் பெறும் சமிக்ஞைகளை அடிப்படையாக கொண்டேயாகும். பயம், துக்கம், மகிழ்ச்சி, கவலை, வெறுப்பு, போன்ற மனதுக்குத் தெரியும் மனோபாவங்களைத் தொடர்ந்து அவற்றுக்கான துலங்ககளும் வெளிப்படுகின்றன.

## ஆ) தூண்டல் - துலங்கல்களின் இயல்புகள்

அகமுகித் தொடர்பாடல் நிகழும் விதத்தை துல்லியமாகப் பரிசீலனை செய்யும் போது அது ஒரு தூண்டல் - துலங்கல் செயலொழுங்கு என்பதை அறிந்து கொள்ளலாம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்கள் பல்வேறு சமிக்ஞைகளால் தூண்டப்படுகின்றன (stimulus). புலன்கள் மூலம் அவற்றுக்கான துலங்களைக் காட்ட மனிதன் ஊக்குவிக்கப்படுகின்றான். தூண்டல் - துலங்கல் (stimulus response) செயற்பாடுகள் ஊடாக தொடர்பாடலின் இயல்பை அறிந்து கொள்ள முடியும். நாம் உலகை புரிந்து கொள்வது எமது மனதுக்குள் நடைபெறுகின்ற இவ்வாறான செயலொழுங்கை அடிப்படையாகக் கொண்டேயாகும். மரங்கள், இலைகள், பூக்கள், செடிகொடிகள், நிறம், அலங்காரம், வடிவம் என்பவற்றை நாம் இவ்விதமே அனுபவிக்கின்றோம்.

அது போன்றே ஒருவர் பேசும் சொற்களுக்கு மறுமொழி கொடுப்பதும் இவ்வாறான தூண்டல் - துலங்கல்களுக்கு இணங்கவேயாகும். சுருக்கமாகச் சொன்னால் உலகத்தில் தொடர்பாடல் தோன்றுவது மனதுக்குள் ஏற்படும் சமிக்ஞைகளுக்கு விடையாக வழங்கப்படும் வரைவிலக்கணங்களாலாகும். அதே போலவே மனது பெற்றுக் கொண்ட தூண்டல்களுக்கு வழங்கப்படும் துலங்கலாலும் ஆகும். இந்த எளிமையான உதாரணம் தொடக்கம் மூளையினால் ஒரு அணு அளவு சமிக்ஞையைக் கூடப் புரிந்து கொள்ளும் விதம் வரைக்கும் விரிவாக ஆராய முடிகின்றது.

ஒரு மொழியின் சொற்களையும் அவை உணர்த்தும் கருத்துக்களையும் விளங்கிக்கொள்வதும் இந்த நடத்தை கோலத்தினூடாகவே வருவதாகும். ஓர் உயிரியல் இயல்பாக தூண்டல் - துலங்கல் கோட்பாட்டை இனங்கண்டு கொள்ளலாம். அது ஏன் எனில் மனித உடலின் புலன்கள், சமிக்ஞைகள், மூளை ஆகிய தொகுதிகள் சார்ந்ததாக நிகழும் ஒரு மனித, உடல், உயிர் நடத்தையாக, தூண்டல் துலங்கல் கோட்பாடு நிரந்தரமாக செயலாற்றுகின்றமையை அறியக் கூடியதாக இருப்பதாகும்.

## இ) சிந்தனையைக் கையாளல்

உங்களுடைய எண்ணங்களை உங்களால் வழிநடாத்த முடிகின்றதா? இந்தக் கேள்விக்கு நீங்கள் சொல்லும் விடை ‘ஆம்’ என்றால் நீங்கள் மிகுந்த வெற்றியாளராவீர்கள். நீங்கள் வழங்கும் பதில் ‘‘இல்லை’’ என்றால் நீங்கள் உங்களைப் பற்றி மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பார்க்க வேண்டியதாக இருக்கும். வழமையாக ஒருவருக்கு 1 நிமிடத்துக்குள் 350 சொற்கள் அளவில் சிந்தனை செய்ய முடிகின்றது. எண்ணங்களை வழிநடாத்துவது உங்களுக்குக் கடினமாக இருக்குமேயானால் சில வினாடிகளுக்குள் தேவையில்லாத ஏராளமானவைகளைப் பற்றி நீங்கள் சிந்திக்க வேண்டியேற்படும். சிந்தனைகளோடு இன்னும் இரண்டு சந்தர்ப்பங்கள் தொடர்புபடுகின்றன.

எண்ணங்கள் மூலமாக எமக்குள் பல்வேறு உணர்வுகள் உண்டாகின்றன. பின்னர் அவற்றை நடத்தைகளாக வெளிப்படுத்த நாம் தூண்டப்படுகிறோம். எண்ணங்களும் உணர்வுகளும் எமது மனதில் ஏற்பட்டாலும் நடத்தையே வெளிப்படையாக மற்றவர்களுக்குப் புலப்படுகின்றது.


சிந்தனைகள்


உணர்வுகள்


நடத்தைகள்

படம் :- 1.2.3 சிந்தனைகள், உணர்வுகள், நடத்தைகள்

நீங்கள் பாடசாலைக் கூட்டத்தில் பேசியிருக்கிறீர்களா? சிலருக்கு மேடையில் பேசுவது சிரமமான விடயமாகும். சிலருக்கு அது மகிழ்வானதாக இருக்கும். ஒரு கூட்டத்தின் முன்னால் பேசுவதற்கு மாணவர்களாகிய உங்கள் எல்லோருக்கும் இயலுமாயிருத்தல் வேண்டும். பேச்சாளனும் கூட்டமும் ஒருவரையொருவர் அறிந்தவர்களாகவும் அறியாதவர்களாகவும் இருக்கலாம். பேச்சாளன் தனது பேச்சை சபையிலுள்ளவர்களைக் கவருமாறு நிகழ்த்த வேண்டும். அது இலகுவான காரியமல்ல. அதற்காக நல்ல பயிற்சியும் அனுபவமும் பேச்சாளனுக்கு இருக்க வேண்டும். ஒரு கூட்டத்தில் பேசுவதற்குரிய நோக்கங்கள் பல்வேறுபட்டவையாக இருக்கலாம். சில வேளை கூட்டத்தை ஏதாவது ஒரு செயலுக்காக தூண்ட வேண்டியிருக்கலாம். ஒரு விடயத்தை சமூகத்துக்கு விளக்குவதாக இருக்கலாம். கூட்டத்துக்கும் பேச்சாளருக்கும் இடையில் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதும் அதனைப் பேணுவதும் பேச்சாளரின் பொறுப்பாகும்.

## ஈ) தொடர்பாடற் செயலொழுங்கின் ஆரம்பம்

ஒர் ஆறு தொடங்குவதற்கு குறிப்பான ஒரு இடமுண்டா? அதே போலவே தொடர்பாடற் செயலைத் தொடங்குவதற்கும் குறிப்பான இடம் ஏதும் உண்டா? என உங்களைக் கேட்டால் நீங்கள் அளிக்கும் பதில் என்ன?

மனித மனதிலிருந்தே தொடர்பாடற் செயல் தொடங்குகின்றது. அதாவது அகமுகித் தொடர்பாடலே தொடர்பாடற் செயன் முறையின் அடிப்படையாகும். சிறிய ஊற்று பெரிய நதியாக மாறி, பரந்த பூமி ஊடாகப் பாய்வதால் அது செழிப்படைகின்றது. அதே போலவே ஒருவரின் மனதுள் உதிக்கும் தொடர்பாடற் செயல் இறுதியில் மனித சக்தியாக மாறி மனித சமூகத்தையே ஊட்டம் பெறச் செய்கிறது.

ஏனைய சகல தொடர்பாடல்களான

- ஆளிடைத் தொடர்பாடல்
- குழுத் தொடர்பாடல் மற்றும்
- வெகுஜனத் தொடர்பாடல்

ஆகிய செயலொழுங்குகள் நடைபெறுவது மனிதர்களின் தொடர்பாடற் செயலை அடிப்படையாகக் கொண்டேயாகும்.

ஆளிடைத் தொடர்பாடலிலும் குழுத்தொடர்பாடலிலும் குறைந்த எண்ணிக்கையினரே இருப்பார்கள். வெகுஜன தொடர்பாடலுக்காக அச்சு, வானொலி, தொலைக்காட்சி ஊடகங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அந்த ஊடகங்களில் எந்தளவு நவீன நுட்பங்கள் இருந்தாலும் அவற்றை உயிர்ப்பான பயனுள்ளதாக ஆக்கிட மனிதர்கள் தேவைப்படுகின்றனர். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி போன்ற அனைத்து ஊடகங்களிலும் ஊடகவியலாளர்களே முக்கியத்துவம் பெறுகின்றார்கள்.

இதன்படி நாம் விளங்கி கொள்ள வேண்டிய முக்கிய விடயம் ஒன்றுள்ளது. தொடர்பாடல் செயலொழுங்கில் உள்ள எல்லா உபகரணங்களையும் தொழில் நுட்பங்களையும் விட ஆட்களே முக்கியத்துவம் பெறுகின்றனர். அதற்குக் காரணம் தொடர்பாடற் செயல் மனிதர்களிலிருந்தே ஆரம்பமாகின்றது என்பதேயாகும்.

## 1.3 ஆளிடைத் தொடர்பாடல் (Inter Personal Communication)

### அ) இருவர் அல்லது பலருக்கிடையிலான தொடர்பாடல்

இருவருக்கிடையே நடைபெறும் தொடர்பாடல் ஆளிடைத் தொடர்பாடலின் இயல்பாகும். ஒரு தோழன் தோழியுடன் பேசுவதாயின் அதுவும் ஆளிடைத் தொடர்பாடலாகும். தொடர்பாடலின் போது ஒருவரை ஒருவர் அறிமுகமாகிக் கொள்வதற்கும் அறிமுகமாகிப் பழகுவதற்கும் சந்தர்ப்பம் கிடைகின்றது. இதன் சிறப்பம்சம் யாதெனில் ஒருவர் முகத்தை மற்றவர் பார்க்கவும் பார்த்தும் பேசும் சந்தர்ப்பமாக இருத்தலாகும். அவ்வாறல்லாத சந்தர்ப்பங்களுமுண்டு. தொலை பேசியில் இருவருக்கிடையே நடைபெறும் தொடர்பாடலும் ஆளிடைத் தொடர்பாடலே ஆகும். அதன் போது ஒருவருக்கொருவர் முகம் பார்த்துப் பேசுவதில்லை. எனவே சந்தர்ப்பத்துக் கேற்ப இதன் இயல்புகளைப் புரிந்து கொள்ள வேண்டும். மொழி பற்றிய அறிவு இல்லாத நிலையிலும் கூட ஆளிடைத் தொடர்பாடல் நிகழ முடியும்.



படம் :- 1.3.1 ஆளிடைத் தனியாள் தொடர்பாடல்

அதாவது அங்க அசைவுகள், உருக்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி வெற்றிகரமான தொடர்பாடலொன்று நடைபெற முடியும். அவ்வாறு நடைபெறாதிருக்கவும் முடியும். அத்துடன் ஆளிடைத் தொடர்பு நடைபெறும் சந்தர்ப்பம், நேரம் சூழற் தாக்கம், இடைத்தூரம் போன்ற விடயங்களும் தொடர்பாடலில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளாகும்.

## ஆ ) சமூக நிலைப்பாட்டின் அத்தியாவசிய அங்கம்

ஆளிடைத் தொடர்பாடல் சமூக நிலவுகையின் அத்தியாவசிய அங்கமாக காணப்படுகின்றது. மனிதன், தனியாக இருப்பதற்கு விரும்பும் ஓர் உயிரினமல்ல. குழுவாக இருப்பதற்கே விருப்பம் காட்டுவான். குழுவாக இருக்கும்போது ஒவ்வொருக்கிடையில் தொடர்பு இருத்தல் வேண்டும். ஒருவருக்கொருவர் அறிமுகமாகி தமது செயற்பாடுகளை தொடர்புபடுத்திக் கொள்ள செயற்பாடு நடத்திச் செல்ல தொடர்பாடல் அவசியம். அயல்வாசிகளுடன் நட்பாக இருப்பதற்கும் தொடர்பாடல் அவசியம். அலுவலகத்திலும் பாடசாலையிலும் கடைத் தெருவிலும் சந்திக்கும் நாம் அறிமுகமானவர்களோடு நாம் பேச வேண்டியேற்படும். ஒரு சமூகமாகக் கட்டியெழுப்பபடுவதென்பது நம் ஒவ்வொருக்கிடையேயும் ஏற்படும் உறவாகும். சமூகம் எனக் கட்டியெழுப்பப்படுவது நம் ஒவ்வொருத்தருக்கும் இடையில் ஏற்படுகின்ற புரிந்துணர்வேயாகும். இந்நட்பு தொடர்பாடல் மானுட சமூகத்துக்குள் மட்டுமன்றி விலங்குகளின் சமூகத்திலும் காணப்படும் பொதுவான இயல்பாகும்.

## இ) ஆளிடைத் தொடர்பாடலின் சிறப்பியல்புகள்

1. ஆளிடைத் தொடர்பாடல் வாய் மொழி மூலமும் வாய் மொழியல்லாத வகையிலும் நிகழலாம். சொற்களால் மட்டுமன்றி சமிக்ஞை, குறியீடு, சித்திரம் போன்றவைகளாலும் கருத்துக்களை வெளியிட முடியும்.

2. ஆளிடைத் தொடர்பாடல் உயிர்ப்பானதாகும். ஒருவருடன் முகம் பார்த்துத் தொடர்பாடலில் ஈடுபடுவதனால் ஒவ்வொருவரின் நடத்தைகளை நன்கு இனங்கண்டு கொள்ள முடியும்.

3. ஆளிடைத் தொடர்பாடலின் போது துலக்கங்களையும் பின்னூட்டலையும் உடனுக்குடன் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு தொடர்பாடற் செயலொழுங்கைத் தொடர்ந்து மேற்கொள்ளும் வாய்ப்பும் உண்டு.

4. ஆளிடைத் தொடர்பாடலின் பெறுபேற்றை அதே நேரத்திலேயே பெற்றுக் கொள்ளும் வாயப்புண்டு.

5. ஒருவரிடம் தூண்டலை ஏற்படுத்தி ஊக்குவிக்கும் செயலொழுங்கில் ஆளிடைத் தொடர்பாடலுக்கு ஒரு பங்குண்டு.

6. தொடர்பாடலில் ஏற்படும் தடைகளைக் குறைத்துக் கொள்ளக் கூடிய நிலை ஆளிடை தொடர்பாடலுக்குண்டு

7. மீண்டும் மீண்டும் ஒன்றை வலியுறுத்தி விரிவான விளக்கத்தை ஏற்படுத்துவதற்காகப் பயன்படும் ஒரு முறையே ஆளிடைத் தொடர்பாடலாகும்

8. பயனாளியின் சூழல், அனுபவங்களின் பின்னணிகளுக்கேற்ப ஒன்றை விளக்குகின்ற, புரிந்து கொள்ளச் செய்கின்ற ஆற்றல் ஆளிடைத் தொடர்பாடலுக்குண்டு.

9. ஒருவருடைய மனோபாவத்தை அறிந்துகொள்வதற்கும் அதன்படி செயற்படுவதற்கும், தொடர்புகளை வலுப்படுத்திக்கொள்வதற்குமான விரிவான வாய்ப்பு ஆளிடைத் தொடர்பாடலுக்குண்டு.

10. ஆற்றுகை உணர்வுகளை வெளிப்படுத்துவதில் ஆளிடைத் தொடர்பாடல் முக்கியத்துவம் பெறுகின்றது. ஒருவரின் மகிழ்ச்சி, பயம், கோபம், அன்பு என்பவற்றை மற்றவருக்கு விளங்கும் வகையில் முன்வைக்க இம்முறை பயன்படுகின்றது.

## ஈ) ஆளிடைத் தொடர்பாடலுக்கான தொழில் நுட்பக் கருவிகள்



படம் :- 1.3.2
ஆளிடைத் தொடர்பாடல் கருவிகளின் பாவனை

ஆளிடைத் தொடர்பாடல் என்பது சோடித் தொடர்பாடலாகும். பொதுவாக நாம் இதனை முகத்துக்கு முகத் தொடர்பாடல் என்று கூறுவோம். எனினும் நவீன தொடர்பாடற் தொழில் நுட்பங்களினால் இதன் தோற்றப்பாட்டில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது ஆட்கள் முகத்துக்கு முகம் பார்த்து பேச அண்மையில் இருப்பதில்லை. இப்போதெல்லாம் தொழில் நுட்பம் இடையில் புகுந்துள்ளது.

இங்கு தொலைபேசி ஒரு பிரதான தொழிநுட்பக் கருவியாக ஆகியுள்ளது. தெருவில், பேருந்துகளில், அலுவலகங்களில் அல்லது நேரடியாக பார்க்கும் போது தனியாக சிரிக்கின்ற பேசுகின்ற நபர்களை நீங்கள் கண்டிருக்கின்றீர்களா? சுற்றியிருப்பவர்களைப் பற்றி அவர்கள் கொஞ்சமும் அவதானிக்க மாட்டார்கள். தொடர்ச்சியாகப் பேசிக்கொண்டிருப்பார்கள்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

கையடக்கத் தொலைபேசி கருவிகளினூடாக இங்கு தொடர்பாடல்கள் நடைபெறுகின்றன. ஒருவர் இந்த இடத்திலும் மற்றவர் உலகின் மற்றொரு எல்லையிலும் இருப்பார்.

இன்று உலகில் தோன்றியுள்ள நவீன தொழில் நுட்பத்துக்கு இணங்க தொலைபேசி உரையாடலில் ஈடுபடுபவர்களின் முகம் தொலைபேசித் திரையின் ஊடாக தெரியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதே போலவே இணையத்தில் உரையாடல் வசதியைப் பெற்று இருவர் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் முடியும்.

## 1.4 கூட்டுத் தொடர்பாடல் (Group Communication)

### அ) கூட்டுத் தொடர்பாடலின் தோற்றப்பாடு

ஒரு குழுவினரிடையே நடைபெறுவது கூட்டுத் தொடர்பாடலாகும். சிறிய குழுக்கள், பெரியகுழுக்கள் என கூட்டுத் தொடர்பாடல் இரு வகைப்படும். சிறிய குழுக்கள் என்பதை சில வேளையில் இருபது பேருக்கு மேற்படாத குழுவென வரைவிலக்கணப்படுத்தலாம். பெரிய குழு என்பது இருபது பேருக்கு மேற்பட்டதாகும். கூட்டுத் தொடர்பாடலும் ஆளிடைத் தொடர்பாடலைப் போலவே தொடர்படுபவரும் பெறுநரும் நேருக்கு நேராக தொடர்பாடலில் ஈடுபடுவார்கள். ஆனால் ஆளிடைத் தொடர்பாடலைப் போல மிக நெருக்கமாக இருக்காது.

எனினும் வெகுஜன தொடர்பாடலை விடக் கூட்டுத் தொடர்பாடலில் பெறுநருடன் சிறிது நெருக்கமாக இருப்பர். ஒவ்வொருவரின் நடத்தைக்கேற்ப அவர்களின் துலங்கல்களுக்கேற்ப தொடர்பாடல் நிகழும். ஒரு விகாரையின் முற்றத்தில், கோயிலில், பள்ளிவாசலில், வயலில், வகுப்பறையில், அலுவலகத்தில் நிகழ்வது கூட்டுத் தொடர்பாடலாகும்.

கூட்டுத் தொடர்பாடலில் அனேகமாக ஒரு குழுத்தலைவர் இருப்பார். அவர் தன்னுடைய குழுவை நெறிப்படுத்துவார். முறைசார் குழுக்களைப் போலவே முறைசாராக் குழுக்களும் உண்டு.



1.4.1 படம்:- கூட்டுத் தொடர்பாடல்

முறைசார்ந்ததாக ஒரு சங்கம், விளையாட்டுக் கழகம், வகுப்பறை போன்றவற்றில் சந்திக்கும் குழுவைக் கூறலாம்.




படம் :- 1.4.2 முறைசார் தொடர்பாடல்




படம் :- 1.4.3 முறைசாராத தொடர்பாடல்

ஒரு பஸ்தரிப்பு நிலையத்தில் மழைக்காக ஒதுங்கும் சிலரிடையேயும் கடை விறாந்தையில் கூடும் சிலரிடையேயும் நிகழ்வதை முறைசாராத் தொடர்பாடல் என்று கூறலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அரசியல் விடயங்களைப் பற்றி, பொருட்களின் விலைபற்றி உரையாடப்படலாம். இங்கு முறைசார் தன்மை இல்லாவிட்டாலும் ஒவ்வொருவருக்குமிடையிலான தொடர்பாடற் கருமங்கள் முக்கியமானவை.

முறைசார் குழுக்கள் ஒரு முறையான திட்டத்திற்கு இணங்கச் செயற்படுகின்றன. மரண நலன்புரி சங்கத்தில் ஒன்று கூடுபவர்கள் நோக்கத்துக்கு இணங்க கிராம நலன் கருதி வேலைத்திட்டங்களை நடைமுறைப் படுத்துகின்றனர். ஒரு கிராம அபிவிருத்தி சங்கத்திலே அந்த ஊரில் நடைபெற வேண்டிய அபிவிருத்திச் செயல்முறைகள் பற்றி உரையாடுவார்கள். அங்கு ஊர்மக்கள் தங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தி அதைப்பற்றி உரையாடுவார்கள். கூட்டுத் தொடர்பாடலின் இயல்பானது, பலவாறான கருத்துக்களை முன்வைத்து அதிலிருந்து சிறந்த கருத்தொன்றை தெரிந்தெடுக்க வசதியாக இருப்பதாகும். பழங்காலத்திலிருந்து மிகச் சிறப்பாக பயன்படுத்தப்பட்ட தொடர்பாடல் முறையாகக் கூட்டுத் தொடர்பாடலைக் குறிப்பிடலாம். உலகில் தோன்றிய உன்னதமான சமயத் தலைவர்கள் தங்களது சமய தர்மங்களை பிரசாரம் செய்வதற்கு கூட்டுத் தொடர்பாடல் முறையை உபயோகித்தனர் அதேபோல இன்றும் மிகச்சிறப்பாக கூட்டுத் தொடர்பாடல் முறையை சமூக, சமய, அரசியற் செயற்பாடுகளில் பயன்படுத்துவதைக் காணலாம்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## ஆ) கூட்டத்திற்கும் பேச்சாளருக்குமிடையிலான தொடர்பு

கூட்டம் என்பது சில மனிதர்களை அல்லது ஒரு குழுவைக் குறிப்பதாக இருக்கலாம். ஒரு குழு எனும் போது ஒன்றாக வேலை செய்பவர்கள் என்பது அதன் பொருளல்ல. எனவே அவர்களுக்கென்று ஒரு தலைவரும் இருக்க மாட்டார். ஒரு குழு என்பது ஒரு பொது நோக்கத்தை அடைந்து கொள்வதற்காக ஒன்று சேரும் தனி மனிதர்களின் கூட்டமாகும். அப் பொது நோக்கத்தை அடைவதை அடிப்படையாகக் கொண்டு ஒரு பிணைப்பு அவர்களிடம் இருக்கும். அவர்களிடையே ஒரு தலைவரும் இருப்பார். கூட்டத்தின் முன்னால் பேசுவதற்கு இடம் கிடைப்பது யாருக்கு? பாடசாலை ஊடக சங்கக் கூட்டத்தில் சகோதர மாணவ மாணவிகள் முன்பாகப் பேச உங்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளதா? இவ்வாறாக ஒரு கூட்டத்தின் சிறந்த பேச்சாளர் ஆவதென்பது ஒருவருக்கு மகிழ்ச்சியான சவாலாக அமைவதுடன் மற்றொருவருக்கு விரும்பத்தகாத அனுபவமாக இருக்கலாம்.

கூட்டத்துக்கும் பேச்சாளருக்குமிடையே கவர்ச்சியான தொடர்பு இருக்க வேண்டும். குழு என்றாலும் கூட்டம் என்றாலும் அதில் வேறுபாடில்லை. கூட்டம் என்பது குறிப்பிட்ட எண்ணிக்கையிலான ஆட்களாக இருக்க பேச்சாளர் தனி நபராக இருப்பர். தான் பேசும் நேரத்தில் சபையைக் கவரும் பொறுப்பு பேச்சாளரைச் சார்ந்ததாகும். முறைசார் குழுக்களில் ஒரு கூட்டுப் பொறுப்பிருக்கும். முறைசாரா குழுவில் அத்தகைய பொறுப்பிருக்காது. பேச்சாளர் குறிப்பிட்ட நேரத்தில் இத்தகைய குழுவையே எதிர்கொள்ள வேண்டியிருக்கும். சமூக இயல்பு எவ்வாறானதாக இருந்தாலும் அவர்களின் முன் போகும் சந்தர்ப்பத்தில் ஒரு கணத்திலே பேச்சாளருக்கும் அந்தக் கூட்டத்துக்குமிடையில் ஒரு தொடர்பு ஏற்பட்டுவிடுகின்றது.

சில பேச்சாளர்கள் இரண்டு கைகளையும் உயர்த்தி வணங்கிக் கூட்டத்தின் முன்னால் வருவர். எல்லோரும் இவ்வாறாக வரவேண்டும் எனக் கூற முடியாது. இருப்பினும் கூட்டத்தின் கவனத்தை தொடக்கத்திலேயே பேச்சாளர் தன்பால் ஈர்த்துக் கொள்ள வேண்டும்.

உங்களது பாடசாலை மாணவர் மன்றத்தில் பேசுவதற்கு சபையேறி வரும் நண்பர்களின் நடத்தைகளை நீங்கள் பார்த்திருக்கின்றீர்களா?

அந்த மாணவப் பேச்சாளர்களின் முகங்களை நன்றாகப் பாருங்கள். அவர்களின் கண்கள் மேல் நோக்கியுள்ளது. அல்லது தங்கள் முன்னேயுள்ள நிலத்தை நோக்கியுள்ளது. இதற்கு காரணமென்ன? பேசும் போதுதான் நன்றாக அறிந்த தனது பாடசாலைச் சிநேகிதர்களை நேரடியாகப் பார்ப்பதற்கு பயம் ஏற்படுவதாகும். இதனை சபைக் கூச்சம் என்று கூறுவர். சபைக் கூச்சம் அல்லது சபை முன்னால் நிற்பதற்கு உண்டாகும் வெட்கத்தால், பயத்தால் ஒரு பேச்சாளராக விரும்பும் உங்களுக்கும் கூட்டத்துக்குமிடையிலான தொடர்பு முறிவடைந்து போகும். கூரையை நோக்கிப் பேசுவதற்குப் பதிலாக சபையை

நோக்கிப் பேசுவதன் மூலம் கூட்டத்தோடு ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள முடியும்.

விழிவழித் தொடர்பு (Eye Contact) என்பது தன்முன்னால் இருக்கும் கூட்டத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்குள்ள மிகச் சிறந்த ஒரு முறையாகும். சபையை நோக்குவதன் மூலம் பார்த்தபடியே அவர்கள் கண்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு பேச்சை ஆரம்பிக்கலாம். அதுமட்டுமல்ல இந்த விழிவழித் தொடர்பை தனது பேச்சை நிகழ்த்துகின்ற நேரம் முழுவதுமே வெற்றிகரமாக நடாத்திச் செல்வதற்கு முடியுமாயிருத்தல் வேண்டும்.


சில பேச்சாளர்கள் தங்கள் முன்னேயுள்ள சபையில் ஒரு பகுதியினருடன் மட்டுமே தன்னுடைய விழிவழித் தொடர்பை ஏற்படுத்துவார்கள். காணப்படுகின்றது. முன் வரிசைகளில் உள்ளவர்களோடு மட்டும் அல்லது தன் அருகில் இருப்பவர்களோடு மட்டும் இவ்வாறான தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதால் பெருஞ் சிரமம் ஏற்படும். இதனால் பேச்சைத் தொடங்கி சிறிது நேரத்தில் சபையில் பலர் பேச்சாளரின் பேச்சுக்கு செவிசாய்க்காமல் தத்தமக்குள் ஏதெனும் பேச ஆரம்பிப்பார்கள். இந்த நிலை நீடித்தால் சிறிது நேரத்துக்குள்ளேயே பேச்சாளருக்கு எதிர்ப்பு ஏற்படுவதற்கு இடமுண்டு. ஒரு சபையிலே பல்வேறான நடத்தைகள் ஒரு உள்ள நபர்கள் வந்து இருப்பார்கள் என்பதை நாம் மறக்கக் கூடாது. கூட்டத்துக்கும் பேச்சாளருக்கும் இடையிலான தொடர்பை கட்டியெழுப்புவதையும் நடத்திக் செல்வதையும் ஒரு கலங்கரை விளக்க உபாயமாகக் கூறலாம்.



படம் :- 1.4.4
கிரகிப்பவர்களின் தோற்றப்பாடுகள்

(Light House Technique)

கூட்டத்துக்கும் பேச்சாளருக்கும் இடையிலான தொடர்பை கலங்கரை விளக்கத்துக்கு உதாரணமாகக் கூறினோம். அதனை நன்கு விளங்கிக் கொள்ள கலங்கரை விளக்கம் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் அல்லவா?



படம் :- 1.4.5 கலங்கரைவிளக்கம்

கலங்கரை விளக்கம் மிக உயரத்தில் அமைந்துள்ளது. சமுத்திரத்தில் ஓடும் கப்பல்களுக்கு பாதை காட்டுவதற்காகவே கலங்கரை விளக்கம் மிக உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. அதற்கான கூர்மையான ஒளியை வெளியிடும் ஓர் இடம்

கலங்கரை விளக்கத்தின் உச்சியிலே இருக்கின்றது. அது சாதாரணமாக ஒரு நிமிடத்துக்கு ஒருதடவை சுழலும். நீங்கள் கலங்கரை விளக்கில் சுழலும் ஒளியை நோக்கினால் அது ஒருநிமிடத்துக்கு ஒருமுறை தெரிந்து மீண்டும் மறைந்து போய்விடுவதைக் காண்பீர்கள்.

இவ்வாறாக பேச்சாளர் தம் முன்னால் இருக்கும் எல்லோருக்கும் கலங்கரை விளக்க ஒளியாக விளங்க வேண்டும். பேச்சாளர் தனது பேச்சை நடாத்திக் கொண்டு போவதற்கு இடையில் ஒரு நிமிடத்துக்கு ஒரு தடவையாவது சகலரையும் நோக்கவேண்டும். அல்லாவிடில் விழிவழித் தொடர்பை வைத்துக்கொள்ளல் வேண்டும். பேச்சாளர் தமது பேச்சினை நடாத்திச் செல்லும் பொழுது இடைக்கிடை இரண்டு நிமிடத்திற்கு ஒரு முறையாவது சபையோர் மீதும் தமது பார்வையை செலுத்துதல் வேண்டும்.

இந்த உத்திகளைப் பயன்படுத்துவதே முதலில் கட்டாயம் செய்ய வேண்டிய ஒன்றாக பேச்சாளன் கருத வேண்டும். பின்பு அது பழக்கமாகி தானாகவே நிகழும். எவ்வாறாயினும் ஒரு நபர் தனது கூட்டத்துடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதற்கு கலங்கரை விளக்க உத்திக்கு மேலதிகமாக பேச்சு உபாயங்கள் அதாவது நகைச்சுவை, கேள்வி கேட்டல், கலந்துரையாடல் சம்பவங்கள் கலை அம்சங்களைக் கையாளுதல் போன்றவற்றைப் பொருத்தமாகக் கைக்கொள்ள வேண்டும். கண்கள் ஊடாக மிகவும் சிறப்பாகச் சபையிலுள்ள எல்லோருடைய அவதானிப்பையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றபடியால் அது முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனெனில் அதுவே சபையிலுள்ளவர்களின் கவனத்தை ஈர்க்க உதவும்.


## இ) தொழில்நுட்ப உபகரணப் பயன்பாடு

கூட்டத்திலுள்ளவர்களது எண்ணிக்கை அதிகரிக்கும் போது பேச்சாளருக்கும் கூட்டத்துக்குமிடையிலான பௌதிகத் தூரம் அதிகரிக்கும் பேச்சாளர் ஒருவர் என்றபடியினால் கூட்டத்தின் அளவுக்கேற்ப தனது குரலை உயர்த்திக் கொள்ள முடியாது. ஆகையால் பேச்சாளருடைய குரலை அதிகரித்துக் கொள்வதற்கான தொழில்நுட்பக் கருவிகள் தேவைப்படும். அதற்காக ஒலி பெருக்கிகளை உபயோகித்துக் கொள்வோம். பேச்சாளருக்கு ஒலிவாங்கி (Micro phone) கிடைப்பதாலும் கூட்டம் அந்தப் பேச்சை கிரகித்துக் கொள்வதற்காக ஒலிபெருக்கிக் கருவிகள் இருப்பதாலும் பேச்சு சபைக்கு நன்கு கேட்கும்படியாக அமைத்துக் கொள்ளலாம்.



படம் :- 1.4.6 கொழுவும் ஒலிவாங்கி
(Clip Micro Phone)

பழைய ஒலிபெருக்கிக் கருவிகளுக்குப் பதிலாக தற்காலத்தில் உயர்தொழில் நுட்பத்தினூடாக ஒலிபெருக்கிகள் பாவனைக்குட்படுத்தப்படுகின்றன. இங்கு குறிப்பிடத்தக்கது எப்.எம் பண்பலை ஒலிவாங்கி ( FM Micro Phone) இதனால் கம்பியில்லாத ஒலிவாங்கிகளைப் பாவிப்பதற்கு எமக்குச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. பேச்சாளருக்கு தனக்கு விருப்பமான இடத்திலிருந்து நடந்து கொண்டே பேசுவதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது. அது மாத்திரமல்ல சபையிலிருந்து வினாக்களைத் தொடுப்பதற்கு கம்பியில்லா ஒலிவாங்கிகளை பயன்படுத்த முடியும். இது மிகவும் வசதியானதாகும். கம்பியில்லாத ஒலிவாங்கிகள் தற்காலத்தில் மிக அதிகமாகப் பாவிக்கப்படுகின்றன. கையால் பிடித்துக் கொண்டிருப்பதற்குப் பதிலாக பேச்சாளருடைய மேற்சட்டையில் இதனை கொழுவி வைக்க முடிகின்றது.



படம் :- 1.4.7
கூட்டு ஊடக நிழல் கருவிகள் பாவனை

கூட்டம் பெரிதாகும்போது ஏற்படும் மற்றுமொரு பிரச்சினை தனது பேச்சுடன் தொடர்பான உருக்கள் புகைப்படங்கள் போன்றனவற்றை முன்வைப்பதில் உள்ள சிக்கலாகும். எனவே செவிப்புல, கட்புல சாதனங்களை பயன்படுத்த வேண்டியிருக்கும். பக்கப்புரட்டி, சுவரொட்டி, கணனியின் திரை, சினிமாச்சுருள், மேந்தலை எறிவை (Over Head Projector) வழுக்கி என்பன இதில் அடங்கும். தேவைக்கதிகமாகக் கட்புல செவிப்புல உபகரணங்களையும் பயன்படுத்துதல் பேச்சை உரிய முறையில் முன்வைக்கத் தடையாக அமையும்.

## இ) கூட்டுத் தொடர்பாடலின் சிறப்பியல்புகள்

1. தொடர்பாடலை உயிர்ப்புடனிருக்கச் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தல்
2. பங்குபற்றுபவர்களிடையே ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தி அவர்களுடைய கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்தல்.
3. ஏதாவதொரு கருத்து அல்லது பிரேரணை பற்றி ஆலோசனைகளை எல்லோருடைய கருத்துக்களையும் அத்தருணத்திலேயே தெரிந்து கொள்ள முடிதல்
4. ஏதாவதொரு பிரேரணையை நடைமுறைப்படுத்துவதில் பொது உடன்பாடு காணல்.
5. குழுவுக்குள் ஒரு தலைவர் இருத்தல்.

6. பங்குபற்ற ஒரே ஒரு குழுவாக இருந்தாலும் அவர்களிடையே பல்வேறு அபிப்பிராயங்கள் இருத்தல்
7. பல்வேறு கோணங்களில் ஏதாவது ஒரு பிரேரணையை அல்லது கருத்தை கலந்துரையாடும் வாய்ப்பு கிட்டுதல்.
8. குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு இணங்க முறையாக செயற்படுத்தல்
9. குறிப்பிட்ட கால அட்டவணையில் பணியாற்ற முடிகின்றமை.
10. பல்வேறு திறன்கள் உள்ளவர்களை பங்குபற்ற வைக்கவும் அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளவும் முடிதல்
11. கூட்டத்தினர் ஒன்றாக இருத்தல்.
12. தொழில்நுட்பக் கருவிகளை பாவிக்க வேண்டியிருத்தல்

## 1.5 வெகுஜன தொடர்பாடல் (Mass Communication)

### அ) வெகுஜன தொடர்பாடலின் இயல்பு

உங்கள் முன்னாலிருக்கும் கூட்டத்துடன் தொழிநுட்பக் கருவிகளைப் பாவித்து கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள உங்களால் முடியும். உங்கள் முன்னால் இல்லாத நீங்கள் அறியாத பெருந்தொகையான மக்கள் கூட்டத்துடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வது எவ்வாறு? அதற்காக தொழில் நுட்பத்தை பாவிக்கவேண்டியுள்ளது. கூட்டுத் தொடர்பாடலில் கம்பிகள் இணைக்கப்பட்ட ஒலிபெருக்கிக் கருவிகள் பயன்படுத்தப்பட்டாலும் பெருந்தொகையான மக்களுக்கான தொடர்பாடலின்போது கம்பியுள்ள தொழிநுட்பக் கருவிகளுக்குப் பதிலாக வேறு முறைகளை பயன்படுத்த வேண்டியிருக்கும்.

தொடர்பாடுபவர் தனக்கு முன்னால் இல்லாத போதும் பெருந்தொகை மக்கள் தொகையுடன் தொடர்பாடலை மேற் கொள்வதை நாம் வெகுஜன தொடர்பாடல் என அழைக்கின்றோம். வெகுஜன தொடர்பாடலுக்காக பயன்படுத்தும் ஊடகங்கள் வெகுஜன ஊடகங்கள் (Mass Media) என அழைக்கப்படுகின்றது.

வெகுஜனத் தொடர்பாடல் ஏனைய தொடர்பாடல் முறைகளிலிருந்து வேறுபட்ட ஒரு செயற்பாடாகும். அதன் சில இயல்புகளைப் பின்வருமாறு குறிப்பிடலாம்.

1. தொடர்பாடுபவர் எதிரேயில்லாத நிலைமையில் எங்கேயோ இருக்கும் பெறுநருடன் நிகழும் தொடர்பாடல்.
2. அடிப்படையில் இது ஒருவழித் தொடர்பாடல்.
3. இது ஒரு ஒழுங்கமைப்பினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.
4. உபரணங்கள் அல்லது கருவிகள் என்பன பயன்படுத்தப்படல் வேண்டும்.
5. தொடர்பாடுபவரும் பெறுநரும் நேருக்கு நேராக இல்லை.

வெகுஜன தொடர்பாடல் ஒரு முறைசார்ந்த நடைமுறையாகும். அதே போலவே ஒரு பலரின் பங்கு பற்றலுடன் கூடிய ஒழுங்கமைப்பு ரீதியிலான நிகழ்வாகும்.

அது நிரந்தரமாகவே பொது மக்களை நோக்கியதாக இருக்கும். வெகுஜனம் எனபது இங்கு பல்வேறு சமூக, பொருளாதார, கல்வி, இனத்துவ, தேசிய, தொழில்சார் என்றவாறு பரந்து நிற்கும் மக்கள் கூட்டத்தைக்குறிக்கும். இது எண்ணிக்கை ரீதியான ஒரு திரட்டு மட்டுமின்றி பண்பு ரீதியிலும் தொடர்புடையதாகும்.

## ஆ) வெகுஜன தொடர்பாடலுக்கும் வெகுஜன ஊடகங்களுக்கும் இடையிலான தொடர்பு

இந்த நூற்றாண்டில் வெகுஜன ஊடகங்களினால் உங்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் எவ்வகையானதென ஒரு கணம் யோசித்துப் பார்க்கவும்.

- ஐக்கிய அமெரிக்காவில் உலக வர்த்தக மையம் தீப்பற்றி அழிவதை அது நிகழும் போதே கண்டோம்.
- 1996 உலக கிண்ண கிரிக்கற் போட்டிகளை அது நடைபெறும்போதே கண்டு இரசித்தோம்.
- விளையாட்டு வீராங்கனை சுசந்திகா ஜயசிங்க 2000இல் சிட்னி நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் 200 மீற்றர் பெண்களுக்கான ஓட்டப்போட்டியில் மூன்றாமிடத்தைப் பெற்றுக் கொண்டதை நாம் நேரடியாகவே கண்டுகளித்தோம்.



படம் :- 1.5.1
சுசந்திகாவின் வெற்றிக் களிப்பு



படம் :- 1.5.2
1996 இல் உலகக்கிண்ணம் வெல்லப்பட்டபோது.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

வெகுசன தொடர்பாடலுக்கு இத்தகைய வேகமான உயிர்ப்பான உலகளாவிய நிலைமை எவ்வாறு கிடைத்தது? அப்பெருமை வெகுசன ஊடகங்களையே சாரும்.

இக்கருத்துக்களினால் வெளிப்படுவது யாது?

1. வெகுஜன தொடர்பாடலுக்காக மக்கள் வெகுஜன ஊடகங்களை உபயோகித்துக் கொள்வார்கள்.
2. வெகுஜன ஊடகங்கள் இன்றி வெகுஜன தொடர்பாடல் நடைபெற முடியாது.

வெகுசன ஊடகம் தொழில் நுட்பத்தை அடிப்படையாக கொண்ட தொடர்பாடற் செயலொழுங்கை கொண்டதாகும். வெகுஜன ஊடகத்தின் இன்றைய நிலை தீர்மானிக்கப்படுவது வெகுஜன ஊடகத்துக்காக எவ்வளவு தூரம் உயர் தொழில் நுட்பம் பயன்படுத்த முடியுமென்பதை பொருத்தேயாகும்.

## இ) சமூகத் தேவைகளும் தாக்கங்களும்

மின்சாரமற்ற வீடுகளில் வசிப்பவர்கள் வாகன மின்கலங்களை (Battery) அல்லது சூரிய வெப்ப மின்கலத்தை உபயோகித்து தொலைக்காட்சியைப் பார்ப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். சில நேரங்களில் அவ்வாறான வீடுகளிலுள்ள மிகவும் பெறுமதியான வீட்டு உபகரணம் தொலைக்காட்சியாக இருக்கலாம். தொலைக்காட்சியை முழுமையாக பணம் செலுத்தி வாங்க முடியாதவர்களுக்கு தவணை அடிப்படையில் பணம் கட்டுவதற்கு வியாபாரிகள் இடமளித்துள்ளனர். தனது விருப்பத்திற்குரிய தொலைக்காட்சி நாடகத்தைக் கண்டு களிப்பதற்காக இரவில் தீப்பந்தங்களை எடுத்துக்கொண்டு தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கும் வீடுகளுக்குப் போகும் கிராம வாசிகள் பலர் உள்ளனர்.


படம்:- 1.5.3 தொலைக்காட்சியின் தாக்கம்

பேருந்து சாரதி கூட வானொலி அலைவரிசையொன்றினூடாக ஒரு பாட்டைக் கேட்காமல் பேருந்தை ஓட்ட முடியாது என்ற நிலை இன்றுள்ளது. அவர்கள் விரும்பும் பாட்டுக்களைக் கேட்க பயணிகள் தயாராக இருக்க வேண்டும். தொலைக்காட்சி, வானொலி, இலத்திரனியல் ஊடகங்களோடு ஒப்பிடும்போது பத்திரிகை வேறுபட்ட தோற்றம் கொண்டதாக இருப்பினும் வாரந்தோறும், தினந்தோறும் வெளிவரும் பத்திரிகைகளை வாசிப்பது மக்களுடைய பழக்கமாக இருக்கின்றது.

சிலர் பத்திரிகைகளை பணம் கொடுத்து வாங்குவார்கள். பாடசாலைகள், அலுவலகங்கள், நூலகங்களில் பொதுவாக பத்திரிகைகளை வாங்குவது வழக்கம். இன்னும் பலர் தொழிலுக்குச் செல்லும் வழியில் பத்திரிகையை விற்பனை செய்யும் கடையருகே சென்று பத்திரிகையின் பிரதான செய்திகளை வாசிப்பார்கள். கிராமங்களை நோக்கினால் கிராமம் முழுவதும் வாசிப்பதற்கான பத்திரிகை தேநீர் கடையிலேயே வைக்கப்படும். சில வேளைகளில் கிராமிய தேநீர்க் கடைகளுக்குச் செல்லும் மக்கள் தேநீரை அருந்திக்கொண்டே பத்திரிகையை வாசிப்பார்கள். அவற்றிலுள்ள செய்திகள் பற்றியும் வேறு விடயங்கள் பற்றியும் அங்கு கலந்து உரையாடுவார்கள்.

இன்றைய ஊடக சூழலைப் பற்றி மிக எளிமையாகக் கூறினால் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்றவற்றுடன் சமூகம் குறைந்த கூடிய அளவில் இணைந்திருப்பதும் அவை மக்களின் அன்றாட வாழ்வின் ஓர் இன்றியமையாத அங்கமாக மாறியிருப்பதுவும் முககியமான அம்சங்கள் ஆகும்.

வெகுஜன ஊடகங்கள் மூலமாக முன்வைக்கப்படுகின்ற செய்திகளும் பிற ஆக்கங்களும் இரண்டு முக்கிய காரணங்களுக்காகச் சமூகத்துக்கு தேவையாக உள்ளன. முதலாவது பொழுது போக்காகும். இரண்டாவது தகவல்கள், செய்திகளை அறிந்து கொள்வதாகும். மானுட நிலைப்பாட்டின் முக்கிய தேவைகளாக இவை உள்ளன. கல்விக்கு வெகுஜன ஊடகத்தைப் பாவிப்பது சம்பந்தமாக மக்களிடையே மிகவும் உதாசீனப் போக்கே காணப்படுகின்றது. அதேபோன்று பொருட்கள் சேவைகளுக்கான விளம்பரங்கள் போன்றே எண்ணக்கருக்கள், கருத்துக்கள் தொடர்பாகவும் ஓர் தூண்டலை ஏற்படுத்த வெகுஜன ஊடகத்தைப் பயன்படுத்தும் தேவை சமூகத்திற்குண்டு.

இறுதியாக நோக்கும் போது தகவல்கள், கல்வி, தூண்டுதல் போன்ற மூன்று கருமங்களில் பொழுதுபோக்கினை முன்னிலைப் படுத்த வேண்டியேற்பட்டுள்ளது. இதற்கிணங்க உலகில் உருவாகியுள்ள புதிய எண்ணக் கருவானது கல்வியையும் பொழுதுபோக்கையும் ஒன்றிணைப்பதேயாகும். ஆங்கிலத்தில் Education and Entertainment என்ற இரு சொற்களையும் ஒன்றிணைத்து **Edu + Entertainment= Edutainment** என்ற புதிய சொற்றொடர் ஒன்று ஆக்கப்பட்டுள்ளது.

மானுட சமூகத்தில் செய்திகளைப் பெற்றுக் கொள்வதற்கான தாகம் பொழுதுபோக்கைப் பெறும் ஆசை என்பவற்றினூடாகத் தெரிய வருவது வெகுஜன ஊடகம் சமூக நிலைப்பாட்டின் அத்தியாவசிய ஓர் அங்கமாக மாறியுள்ளது என்பதாகும். நாளுக்கு நாள் வெகுஜன ஊடகத்தின் உயர்தொழில் நுட்பங்களை விருத்திசெய்யப்படுவது மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவேயாகும்.



படம் :- 1.5.4
தொலைக்காட்சியை பார்த்தல்

வெகுஜன ஊடகத்தின் சமூகத் தாக்கங்களைப்பற்றி ஆராயும்போது மகிழ்ச்சி ஒரு பக்கம் இருபக்கங்கள் மறு பக்கம் துக்கமும் என காணப்படுகின்றன. மானுட சமூகத்தினுடைய உன்னதமான நிலைக்கு வெகுஜன ஊடகங்கள் மிகப்பெரிய தாக்கங்களை உண்டாக்கியுள்ள தென்பது மகிழ்ச்சியான பக்கமாகவும் தகவல்களையும் பெற்றுக்கொள்ள, அழகியல் இரசனைக்கு, அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதில் கைத்தொழில் மற்றும் சேவைகள் மேம்பாட்டுக்கு, மனித தர்மங்களை ஊட்டம் பெறச் செய்வதில், ஊடகங்களில் ஏற்பட்டுள்ள செல்வாக்கைக் குறைத்து மதிப்பிட முடியாது. வெகுஜன ஊடகங்களினால் சமூகமயமாக்கல் தொடர்பிலும் பாரிய பங்களிப்பு நடைபெறுகின்றது. சமூக இருப்பு பல்வேறு அம்சங்களின் இருப்பு நவீனமயப்படுத்தல் ஆகிய சமூகத் தேவைகளில் மட்டும் அன்றி பொதுசன அபிப்பிராயத்தை நெறிப்படுத்துவதிலும் ஊடகம் சீராக பணியாற்றுகின்றது.

சில நிகழ்ச்சிகளைக் தயாரிக்கும்போது சமூகக் கோட்பாடுகளைப் பற்றி கவனம் செலுத்தாதனால் மனிதவிழுமியங்களைக் குறைத்து மதிப்பிடும் நிலை இன்றைய சமூக நடத்தைக் கோலத்தினூடாக தென்படுவதாக பலரும் கருதுகின்றனர்.

### ஈ) நவீன தொடர்பாடல் தொழில் நுட்ப வளர்ச்சி

தொடர்பாடற் தொழில் நுட்பத்தின் வளர்ச்சி கடந்த காலங்களில் வேகமடைந்துள்ளதைக் காணமுடிகின்றது. 1440 ஆம் ஆண்டளவில் ஜொஹன்னஸ் குட்டன் பேர்க் அச்சு இயந்திரத்தைக் கண்டுபிடித்ததற்குப் பின்பு தொடர்பாடல் தொழில் நுட்பம் புதிய பாதையை அடைந்தது. சலனப்படம், புகைப்படக் கருவி, தொலைபேசி, மோர்ஸ் சமிக்ஞை நடைமுறை, கம்பியில்லாத் தொழில்நுட்பம், தொலைபேசி, சினிமா, தொலைக்காட்சி போன்ற பல்வேறு ஊடகக் கருவிகளும் உபகரணங்களும் பிற்கால உலகில் தோன்றின.




படம் :- 1.5.5 நவீன தொடர்பாடல் கருவிகள்

இன்று தொடர்பாடற் கலை தொழினுட்பமுறையூடாக வெகுவேகமாக செய்மதித் தொடர்பாடல் வரை வளர்ச்சியடைந்துள்ளது. இதனால் உலகில் எந்தவொரு இடத்திலும் நடைபெறுகின்ற சம்பவங்களை மிக விரைவாக அறிக்கையிடுவதற்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கும் இப்புதிய தொடர்பாடல் தொழில்நுட்பத்தால் இயலுமாக உள்ளது.

மேலும் தொடர்பாடற் கருமங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற இணயத்தளத்தினூடாகவும் நவீன தொழில் நுட்பச் செயற்பாடுகள் நடை பெறுகின்றன.

எந்தவொரு நாட்டிலிருந்தும் எந்தவொரு செய்தியையும் ஒருவருடனான உரையாடலைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளல், இரசனையைப் பெற்றுக் கொள்ளல் போன்ற தொடர்பாடல் நோக்கங்களை பூர்த்திசெய்வதும் இதன் மூலம் இலகுவாகின்றது. மென்பொருள் (Soft ware) ஊடாக தொடர்பாடலின் புதிய கோலங்களை இலகுவாக உருவாக்கவும் இன்று நவீன தொழில் நுட்பம் ஆற்றல் பெற்றுள்ளது.

பல்வேறு கம்பனிகள், நிறுவனங்கள் அவர்களுக்குத் தேவையான மென்பொருட்களைத் தயாரித்து முன்வைக்கின்றன. இங்கு நிறுவனத்தின் தேவைக்கும் சமூகம் கொடுக்கல் வாங்கல்களுக்கான நிறுவன நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான வகையிலும் இவை ஆக்கப்படுகின்றன.



படம் :- 1.5.6 செய்மதித்தொழில் நுட்பம்

தொடர்பாடல் தொழில் நுட்பம் விரிவடைந்ததோடு மானுட சமூகத்தில் பிரபஞ்ச ரீதியாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுகின்றதொரு தாகம் ஏற்பட்டுள்ளது. பூமிக்கு வெளியே வேறு கிரகங்களில் ஏதேனும் முன்னேற்றமடைந்த உயிரிகள் உள்ளனவா என்பதும், அவர்களுடன் எவ்வாறு தகவல் பரிமாறிக் கொள்வது என்பதும் இன்று விஞ்ஞானிகள் எதிர் நோக்கியுள்ள சவாலாகும்.

தொடர்பாடற் தொழில் நுட்பத்தின் விருத்தி உலகில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை ஆராயும் போது, நாம் மறந்து விடக் கூடாத மற்றுமொரு முக்கிய விடயமுண்டு. அதாவது நவீன உலகம் சமனற்ற இயல்புகளுடனும் சமபலத்துடனும் காணப்படுகின்றது என்பதும், தகவல் பரிமாற்றுதல் கோலம் அதனுடன் இணைந்துள்ளது என்பதுமே அவ்விடயமாகும்.

**ஒப்படை 1.**

1. தொடர்பாடல் என்றால் என்ன என்பதை அறிமுகஞ்செய்து, அது வெற்றிகரமாக இயங்குவதற்கு தேவையான அடிப்படைகள் எவையெனக் கூறுக.
2. தொடர்பாடலின் நோக்கங்கள் எவையென விபரிக்க.
3. முறைசார் தொடர்பாடலிலும் முறைசாரா தொடர்பாடலிலும் உள்ள வேறுபாடுகளை விளக்குக.
4. தொடர்பாடலின் தோற்றப்பாடு எத்தகையதென்று விபரிக்குக.
5. நவீன தொடர்பாடற் தொழில்நுட்ப உபகரணங்கள் எவையென்று அறிமுகஞ்செய்க.

